| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | தேனி | காலம் : | 30/03/2022 | முதல் | 03/04/2022 |
| | அறிக்கை எண் : | 025/ 2022 | வெளியீட்டு நாள் : | 29/03/2022 | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (25.03.2022 முதல் 28.03.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 03-04-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/03 | 26/03 | 27/03 | 28/03 | தேதி | நாள்-1 30/03 | நாள்-2 31/03 | நாள்-3 01/04 | நாள்-4 02/04 | நாள்-5 03/04 |
| 1.1 | 0.0 | 4.8 | 0.0 | மழை (மி.மீ) | 3 | 3 | 2 | 2 | 2 |
| 38 | 38 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 34 | 34 | 35 |
| 25 | 25 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 23 | 24 | 24 |
| 5 | 4 | 4 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 4 | 4 | 4 |
| 80 | 78 | 67 | 57 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 47 | 37 | 47 | 45 | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 12 | 8 | 9 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 4 | 4 | 4 | 4 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | **காற்றின் திசை** | தென்மேற்கு | தென்மேற்கு | தென்மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிக லேசானது முதல் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34° - 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23° - 24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**அடுத்த தூ வாரத்திற்கான ணீ விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (01 - 07 ஏப்ரல் 2022) :**

மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட சி சிறித ளவு கூடுதலாக மழை பெய்ய வாய்ப்பு.

## அதிகபட்ச வெப்பநிலை :

அடுத்த நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34°செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

## குறைந்தபட்ச வெப்பநிலை :

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொது வாக
இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

## இடி மின்னல் எச்சரிக்கை:

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மார்ச் 30 தேதி இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது.
கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்கவும்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**முக்கிய பயிர்கள் : கத்தரி, மக்காச்சோளம், கால்நடை**

### கத்தரி:

தற்போது நிலவும் பருவச் சூழ்நிலையில் கத்தரி பயிரில் சாம்பல் கூன் வண்டு தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவை இலையின் ஓரங்களைக் கடித்துச் சேதம் உண்டாக்குகின்றன. இவற்றின் புழுக்கள் வேர்களின் நுனிகளைக் கடித்துத் தின்பதால் தாக்கப்பட்ட செடிகள் வாட ஆரம்பிக்கின்றன. இவ்வகை கூன் வண்டுகளை சேகரித்து அழிக்க வேண்டும். கடைசி உழவின் போது ஹெக்டேருக்கு 500 கிலோ என்ற அளவில் வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும். இதன் தாக்குதல் அதிகமுள்ள இடங்களில் 10 லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி என்ற அளவில் பிப்ரோனில் மருந்தினை கலந்து இலை வழியாக தெளிக்கவும்.

### மக்காச்சோளம்:

நிலவும் பருவச்சூழ்நிலையில் மக்காச்சோள பயிரில் படைப்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. எனவே விவசாயிகள் உயிரியல் முறையில் இதனைக் கட்டுப்படுத்த படைப்புழுக்கள் தென்படும் முன் 1 ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்பிண்ணாக்கு இடவேண்டும் மேலும் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் பேசிலஸ் துரிஞ்ஜியன்சிஸ் கலந்து தெளிக்கவேண்டும். படைப்புழுக்கள்; தென்பட்ட பின் ஏக்கருக்கு 20 என்ற எண்ணிக்கையில் படைப்புழு இனகவர்ச்சி பொறிகளை வைத்து அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். 100 மில்லி வேப்ப எண்ணெய், சிறிதளவு சோப்பு, 3 மேசைக்கரண்டி அளவு சுண்ணாம்புத்தூள், 3 மேசைக்கரண்டி அளவு மஞ்சள் தூள், 500 மில்லி கோமியம், 8 கற்பூரம் கட்டிகள், ( முதலில் 50 மில்லி எரிசாராயத்தில் கற்பூரக் கட்டிகளை தனியாக கரைத்து) பின் மேற்கூறியவைகளுடன் 10 லிட்டர் தண்ணீரில் ஒன்றாக கலந்து பயிரின் குருத்துப் பகுதி நன்கு நனையுமாறு கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்

### கால்நடை:

தற்போது நிலவும் வெப்பமான வானிலையில் மாடுகளை அடைப்பான் நோய் தாக்க வாய்ப்பு உள்ளது. இந்நோய் தாக்கப்பட்ட மாடுகளுக்கு காய்ச்சல் இருக்கும். மாடுகளில் உணர்வு இழப்பு ஏற்பட்டு பிறகு இறந்து விடும். இறந்தவுடன் மூக்கு, வாய், ஆசனம் போன்றவற்றிலிருந்து கருமை நிறமான இரத்தம் வெளியேறும். இந்நோயில் இருந்து தங்கள் கால்நடைகளைக் காப்பாற்ற

வருடத்திற்கு ஒரு முறை அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசிகளை போடவேண்டும்.